1973 மார்ச் 14]

யாக இந்தப் பகுதி இருந்துவந்த காலத்தில் இந்தக் குத்தகை விதிகள் வழக்கில் இருந்தன. இந்த விதித்துறைகள் பொருந்துகிற உச்ச அளவு நிலங்களை ஒப்படைக்கும் கருத்துடன், அரசு, குத்தகப்பாட்டம் விதிகளையும் கண்டுக்ரிஷி பாட்டம் நில ஒப்படை விதிகளையும் ரத்து செய்து, மாற்றப் பட்ட பகுதிக்கு வருவாய் வாரிய நிலை ஆணைகளை நடைமுறைக்குக் கொண்டு வந்தது. மாற்றப்பட்ட பகுதியில் நில ஒப்படை மூலம், இந்த அனுபோகங்களை முறைப்படுத்துவதில் தாராளக் கொள்கையைப் பின் பற்றி அரசு 1973 மார்ச்சில் ஆணை பிறப்பித்தது. இந்நாள் வரை இந்த நிலங்களில் குத்தகை உரிமை மட்டுமே கொண்டிருந்த பெருவாரியான குடியானவர்களுக்கு இது ஒரு வரப்பிரசாதமாக அமையும். இப்பணியை விரைவில் முடிக்க சிறப்புப் பணியாளர் பிரிவுகள் இரண்டிற்கு அனுமதி வழங்கப்பட்டது.

9. நீலகிரி மாவட்டம், கூடலூர் வட்டத்தில் பெருவாரியான அரசு நிலங்களை ஆக்கிரமித்திருந்தவர்கள் படும் தொல்லையைக் குறைக்கும் பொருட்டு, 1971-ல் அரசு தாராள முடிவு ஒன்று எடுத்தது. இதன்படி, 1971 ஜூன் 30-ம் நாளுக்கு முன்பு இருந்த ஆக்கிரமிப்புகள் யாவும் வழக்கமான நிபந்தனைகளுக்கு உட்பட்டு முறைப்படுத்தப்படும். இதுபற்றி இதுவரை அடைந்த முன்னேற்றத்தைக் கீழ்க்காணும் புள்ளி விவரங்களி லிருந்து அறியலாம்.—

	ஆக்கிரமிப்பின் மொத்தப் பரப்பளவும், சம்பந்தப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கையும்.	28–2–1973 நாள் நிலவரப்படி வழங்கப்பட்ட பட்டாக்கள்.	வழங்கப்படவிருக்கிற பட்டாக்கள்.	வெளியேற்றப் பட்டவை.
பரப்பளவு எக்கரில் ..	11,352	9,060	737	1,555
குடும்பங்களின் எண்ணிக்கை.	7,902	5,573	806	1,523

10. நில ஒப்படை காரியமாக, "ஏழை" என்று கருதப்படுவதற்கான வருமான வரம்பை உயர்த்தி, அரசு, 1972 ஜூலையில் ஆணை பிறப்பித்தது. வருமான வரம்பு பல ஆண்டுகளுக்கு முன் முடிவு செய்யப்பட்டதாலும், அதன் பின்னர் பணத்தின் மதிப்பு படிப்படியாகக் குறைந்துவிட்டதாலும், வருமான வரம்பு இவ்வாறு உயர்த்தப்பட்டது. அதற்கிணங்க, ஐந்தும், ஐந்திற்குக் குறைவான உறுப்பினர்களைக் கொண்ட குடும்பத்தை உடைய நபரைப் பொறுத்த மட்டில், ரூ. 100-லிருந்து ரூ. 200 ஆகவும், ஐந்துக்கு மேற்பட்ட நபர்களையுடைய குடும்பத்தையுடைய நபரைப் பொறுத்த மட்டில் ரூ. 150-லிருந்து ரூ. 250 ஆகவும் மாத வருமான வரம்பை அரசு உயர்த்தியுள்ளது.

11. வீட்டு மனைகளை ஒப்படை செய்தல்.—இம் மாநிலத்தில் நகர்ப் புற, கிராமப்புறப் பகுதிகளில் வீடற்றவர்களுக்கு, வீட்டு மனைகளை இயன்ற அளவுக்கு ஒப்படை செய்வதற்காக 1969ஆம் ஆண்டில் தொடங்கப்